1984 மார்ச் 5] [பேரவைத் தலைவர்]

மேலும் 24-2-1984 ஆம் தேதிய பதிப்பின் முதல் பக்கத்தில் 'வருந்துகிறோம்' என்ற தலைப்பிட்டு வருத்தத்தினைத் தெரிவித்து, இழிவு படுத்தும் நோக்கம் இல்லை என்றும் பத்திரிகை வெளியிட்டுள்ளது. பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கு இணக்கமாக இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் வருத்தத்தை முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ளமைக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே இப் பிரசசினையில் மேல் நடவடிக்கை தேவையில்லை என்று கருதுகிறேன்.

மேலும் அவையின் கண்ணியத்தைக் குறைக்கும் வகையிலோ அல்லது உறுப்பினர்களை இழிவு படுத்தியோ கருத்துப் படங்கள் வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று பத்திரிகைகளைக் கேட்டுக் கொண்டு இப் பிரச்சினையை இத்துடன் விட்டு விடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிவிப்பு.

ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 25-2-1984 ஆம் தேதியிட்ட கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றது என்பதை பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"I have received with satisfaction your Resolution thanking me for my Address on the 13th February 1984 to the Members of the Legislature''.

5. தகவல் கோரல்.

அ. மழையினால் தென் மாவட்டங்கள் பாதிக்கப்பெற்றுள்ளது,

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கும், நேற்றைய முதல் நாளும் பொழிந்த பெரு மழையின் காரணமாக விளாத்திக்குளம், தூத்துக்குடி, ஆத்தூர், புன்னக்காயல், நெல்லை, பாளையங்கோட்டை ஆகிய பகுதிகள் பாதிக்கப்பட்டு. அந்த வெள்ளத்தினால், உயிரும், உடமைகளும் பாதிக்கப்பட்டதாக நாம் பத்திரிகையின் வாயிலாக அறிகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54 ஆவது விதி இருக்கிறது. அந்த விதியின் கீழ் அறிப்புக் கொடுக்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கும், நேற்றைய முதல் நாளும் பொழிந்த பெரு மழையின் காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டு பல பேர் உயிர் இழந்து இருக்கிறார்கள். இதைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர் மானம் வந்து இருக்கிறது. அது இலாக்காவுக்கு போய் இருக் கிறது. என்ன நடவடிக்கை என்று பிறகு தெரியும். இது பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது.

திரு. என். எஸ். வி. சித்தன் : நாளைக்கு எடுத்துக் கொள்ள லாமே, சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இலாக்காவிலிருந்து பதில் வரவேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : சீக்கிரம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றும், நேற்று முன் நாளும், பெருமழை பெய்த காரணத்தினால் திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணியில் வெள்ளம் ஏற்பட்டு, குடிசைகள் பாதிக்கப்பட்டு, பலர் வீடிழக்கும் நிலைமை ஏற்பட்ட உடனேயே மாவட்ட ஆட்சித் தலைவரோடும் மற்ற அதிகாரிகளோடும் தொடர்பு கொண்டு தக்க நிவாரணப் பணிகளை எடுத்துக் கொள்ள வேண்டு மென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. எந்த அளவிற்குச் சேதம் ஏற்பட்டிருச்கிறது. எந்த அளவிற்கு நிவாரணம் அளிக்கப்பட் டிருக்கிறது என்பது பற்றிய விவரங்கள் உடனடியாக இன்றைக்குத் தெரிவதற்கில்லை ஆனால் அதுபற்றிய நடவடிக்கைகள் எடுக் கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமோ அல்லது ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலமோ கேட்டிருக்கின்ற மற்ற விவரங்களைப் பற்றியெல்லாம் அரசுக்குத் தகவல் வந்த பிறகுதான் அரசின் சார்பாகச் சொல்லு கின்ற நேரத்தில் நிலைமைகளை விளக்கிக் காட்ட முடியும். அதற்கு அவகாசம் வேண்டும். ஆனால் அறிக்கை வருகின்ற வரையில் வேலைகள் தடைப்படவில்லை. உடனடியாக எடுக்கப் பட வேண்டிய வேலைகளை, மாவட்ட ஆட்சித் தலைவரும், உரிய அதிகாரிகளும் மற்றவர்களின் துணையைக் கொண்டு எடுக்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டிருக்கிறது. அந்த நடவடிக்கை களெல்லாம் துரிதமாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண் டிருக்கின்றன.